# POPULATION DENSITY AND CHALLENGES: A SOCIOLOGICAL STUDY BASED ON KATTANKUDY DIVISIONAL SACRATARIAT

**Rameez, A. & Nazeera, J.F.**
[1] *Senior lecturer in Sociology , Department of Sociology, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka,*
[2] *Assistant Lecturer in Sociology, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.*
arameez@seu.ac.lk & nazeera19941118@gmail.com

**Abstract**

Density of Population is common acpects of many countries in the world and also Its Population major issue in developing country**.** Similarly, the Reports from Base Hospital- Kattankudy, Divisional Secretariat- Kattankudy and Urban Council- Kattankudy show that the people in Kattankudy are faced with innumerable challenges due to Population Density from 1988 in Kattankudy Divisional secretariat Division in Batticaloa District. Although many measures are taken by the government and Non-governmental Organizations to address these issue, it has been proved that it is a difficult task. This case Study aims at exploring the factors of density population development and many challenges confronting the people. This is a mix study of qualitative and quantitative method employed for data collection purposes. Of which, 90 questionnaires, 10 interviews and 02 focus group discussions were conducted. Findings show that the factors of density population are: lake of living space, regional attachment, developments, security, early marriage and new settlement. The challenges of growth and density of population are social and educational issues, religious and cultural challenges, health issues, economic challenges, growth of diseases, increased crimes and road accident. At the end of the study, this study suggests ways and means to overcome the challenges posed by the density population and proposes suggestions to government and organizations to address these challenges.

**Keywords:** Population Density, Health Issue, Socio and Economic Challenge

**அறிமுகம்**

மக்கள் அடர்த்தி எனப்படுவது, குறிப்பிட்ட நில அலகொன்றில் வாழ்கின்ற மக்களின் தொகை அல்லது எண்ணிக்கையாகும். இது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப்படும். மேலும் குறிப்பிடுகையில் 1 sq.Km$^2$ பரப்பளவில் எத்தனை மக்கள் உள்ளனர் என கணிப்பிட்டதன் பிற்பாடு குறிப்பிட்ட நிலப்பரப்பில் அதை விட அதிகமாக மக்கள் தொகை காணப்படின் அதுவே அதிக சனத்தொகை அடர்த்தி எனவும் கணிக்கப்படுகின்றது (தரம் 09- புவியியல் புத்தகம், கல்வி வெளியீட்டு திணைக்களம்). குணசேன பிலிப்ஸ் உலகப்படப் புத்தகம் (2003), 23 நாடுகளை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தியதன் படி சீனா 1,347.3 மில்லியன், இந்தியா 1210.3 மில்லியன் , ஐக்கிய அமெரிக்கா 313.3 என்றவாறாகவும் ஜப்பான் 127.6 மில்லியன் சனத்தொகை கொண்டு 10வது இடத்திலும் காணப்படுகின்றது.

US.International Data Base (2006) மதிப்பீட்டின் படி, 2050ம் ஆண்டு இந்தியா சீனாவை புறம் தள்ளிவிட்டு 1628 மில்லியன் சனத்தொகை கொண்ட நாடாக முதலிடம் பெறும் என தனது அறிக்கையை முன் வைக்கின்றது. உலகில் மிகப் பெரியதும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட வடக்கு, கிழக்கு அரைகோலப் பகுதியில் அமைந்துள்ள யுரேசியா நிலப் பகுதியின் ஒரு பகுதியான ஆசியாக் கண்டமானது புவி மேற்பரப்பின் 8.7% பரப்பளவும் உலக நிலப்பரப்பில் 30% கொண்டுள்ளது. 3.9 பில்லியன் மக்கள் தொகையையும், (3 878 000

000) 87/$km^2$ (225/sq. km) மக்கள் அடர்த்தியையும், 48 நாடுகளையும் உள்ளடக்கிய கண்டமாக அமைந்துள்ளது(U.N population Division, 2015).

புள்ளி விபரவியல் திணைக்களம்- 2012 அறிக்கைப்படி, இலங்கையில் 65 610 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 2 272 464 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர் இதற்கு முதல் 1981ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டிலிருந்து இன்று வரை 36 சதவீதம் மக்கள் தொகை அதாவது 5 424 714 மக்கள் அதிகரித்துள்ளதாக 2012ம் ஆண்டினது சனத்தொகை கணக்கெடுப்பின் அறிக்கை தெரிவிக்கின்றது. 2014 தொகை மதிப்பீட்டு புள்ளி விபர அறிக்கையின் படி, 1 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்கு 323 சனத் தொகை அடர்த்தி காணப்படுவதாகவும், 0.9% என்ற இவ்வளர்ச்சி வீதத்தினையும் கொண்டதாகவும் இலங்கை காணப்படுகின்றது.

தொகை மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களம் (2015) மதிப்பீட்டின் படி, மேல் மாகாணத்தில் 5 851 130 , மத்திய மாகாணம் இரண்டாவதாக 2 571 557 மக்கள் தொகையையும் 5வது சனத்தொகை அளவில் கிழக்கு மாகாணம் 1 555 510 மக்களினையும் கொண்டுள்ளது. 3 மாவட்டங்களை கொண்ட கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டமானது 5 26 567 மக்கள் எண்ணிக்கையினரையும் 14 நிர்வாக பிரதேசங்களையும் ( DS Division ) கொண்டமைந்துள்ளது (கச்சேரி, மட்டக்களப்பு – 2018). 18 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட காத்தான்குடி பிரதேசமானது 2012 சனத்தொகை புள்ளிவிபரவியல் கணக்கெடுப்பின் படி, 47 603 சனத்தொகையினர் 6.00 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் காத்தான்குடி பிரதேச சபை 2014 ஆண்டு கணக்கெடுப்பின் படி, ஆண்கள் 23 967 பெண்கள் 24 907 என்ற விகித அடிப்படையில் 48 874 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர் என தெரிவிக்கின்றது (Resource Profile, planning Division , Kattankudy DS. division – 2018).

Planning Divisional Secretary Office - Kattankudy 2015 அறிக்கையின் படி, 1 சதுர km பரப்பளவிற்கு 6726/$km^2$ என்ற அடிப்படையில் சனத்தொகை காணப்படுகின்றது என தெரிவிக்கின்றது. பொதுவாக இலங்கை சனத்தொகை அடர்த்தியானது 1 sq. $km^2$ – 323 மக்கள் அடர்த்தியே காணப்படுகின்றது (Department of Census and statistics- 2017). ஆனால் காத்தான்குடியை பொறுத்தமட்டில் 6403 மக்கள் தொகை 1 sq.$km^2$ பரப்பளவிற்கு இலங்கையின் சனத்தொகை அடர்த்தியின் எல்லையை விட அதிகமாக காணப்படுகின்றமை சவாலான விடயமாகும். எனவேதான் அதிகரித்து வரும் சனத்தொகை அடர்த்தியை கவனத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வானது அதனது விளைவுகளை கண்டறியும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

இலங்கை சனத்தொகை அடர்த்தி 1 sq. $km^2$/ 323 (2014) புள்ளிவிபரப்படி காணப்படுகின்ற பட்டசத்தில் காத்தான்குடி பிரதேசவாழ் மக்களின் சனத்தொகை அடர்த்தியானது 1 sq.$km^2$/ 6726 காணப்படுகின்றது. இவ்வடர்த்தி வீதமானது ஏனைய பிரதேசங்களை விட இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ளமையே மிகப் பாரிய சவாலாக அமைந்துள்ளது. இந்நெரிசலான வாழ்வானது சமூகக்கட்டமைப்பில் பல மாற்றங்களை கடந்த காலத்தை விட தற்பொழுது ஏற்படுத்தியுள்ளன. அதுமட்டுமன்றி முரண்பாடுகளும் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டும், மத அமைப்புகளிற்குள்ளே வன்முறைகள் ஏற்பட்டும் அதற்கான சட்ட நடவடிக்கைகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினையை காவல் நிலையத்தரவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இலங்கையில் முஸ்லிம்கள் அனைத்து மாவட்டங்களிலும் வாழ்கின்றபோதிலும் இப்பிரதேசத்தில் மாத்திரம் சனத்தொகை அதிகரிப்பானது பெருகிக் கொண்டே செல்கின்றது. இச்சனத்தொகை அடர்த்தியை கட்டுப்படுத்த இலங்கை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களினால் பல்வேறு யுத்திகளும் செயற்பாடுகளும்

மேற்கொள்ளப்பட்ட போதிலும் காத்தான்குடியில் சனத்தொகை அடர்த்தி ஏன் அதிகரித்து செல்கின்றது என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

அதிகரிக்கும் சனத்தொகை அடர்த்தியினால் மக்கள் எதிர் கொள்ளும் சவால்களை கண்டறிவதே இவடவாய்வின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு சமூகவியலாக உள்ளமையால் பண்புசார், அளவுசார் முறையை கொண்டமைந்துள்ளது. முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் எளிய எழுமாற்று மாதிரி அமைப்பினை கையாண்டு 18 கிராம பகுதிகளில் ஒரு பிரிவிற்கு 05 என்ற அடிப்படையில் 90 வினாக்கொத்துக்கள் ஆய்வாளனுடைய வசதிக்கு ஏற்ப வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுடன் பொருத்தப்பாடான உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொது வைத்திய அதிகாரிகள், ஆய்வாளர்கள், பொலிஸ் அதிகாரி மற்றும் தெரிவு செய்யப்பட்ட புத்தி ஜீவிகள் உட்பட 10 நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறையில் காத்தான்குடி பிரதேசத்துடன் தொடர்புடைய ஆவணப்படுத்தப்பட்ட புள்ளி விபரவியல் அறிக்கைள், பிரதேச செயலகத்தினுடைய வருடாந்த அறிக்கைகள், தள வைத்தியசாலையின் அறிக்கை, பொலிஸ் பிரிவினது குற்றவியல் அறிக்கை, நகர சபையினது ஆண்டறிக்கை உட்பட நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுப் பத்திரிகைகள் போன்றன தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் பெறுபேறுகள்**

குறித்த இவ்வாய்வினது நோக்கம் சனத்தொகை அடர்த்தியினால் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிவதாகும். வினாக்கொத்தின் பகுப்பாய்வு அடிப்படையில் காத்தான்குடியில் ஏற்படும் சனத்தொகை அடத்தியினால் எவ்வாறான விளைவுகள், சவால்கள் ஏற்படுகின்றன என்பது தொடர்பாக 20% பிரச்சினைகளாக காணப்படுவது இருப்பிட ரீதியானவையாகும். இதனை அடுத்து 18% சவால்களாக சமூக ரீதியான விடயங்கள் காணப்படுகின்றது. 12% பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியானவையாகும். தொடர்ந்து 10% விளைவுகள் சுகாதாரம் தொடர்பானவையாகவும், 9%, 8% என்ற அடிப்படையில் கல்வி தொடர்பான சவால்களும் காத்தான்குடி சமூகத்தில் ஏற்படுகின்றன என அறிய முடியுமாக உள்ளது (வினாக்கொத்து). பொதுவாக இது போன்ற பிரச்சினைகளை அனைத்து பிரதேச மக்களும் எதிர் கொள்கின்றவையாக காணப்படுகின்ற போதிலும் காத்தான்குடி பிரதேசத்தில் இதுபோன்ற பிரச்சினைகளின் விளைவுகள் வேறுபட்டவையாக காணப்படுகின்றது என தெரிவிக்கலாம். அவ்வாறான சவால்களை பின்வரும் வகைகளில் மிகத்தெளிவாக விபரணப்படுத்தி காட்ட முடியும்.

**இருப்பிடம் ரீதியான எதிர்நோக்கும் சவால்கள்**

நிலம் அல்லது இருப்பிடம் தொடர்பான காத்தான்குடியின் மொத்த பரப்பானது 6.5 sq.km$^2$ ஆகும். இதில் விவசாய நிலமோ, குத்தகை நிலமோ எதுவும் இல்லை. கட்டடங்களால் நிரப்பப்பட்ட சூழலுடனான சமூக அமைப்பை கொண்டுள்ளது.

அட்டவணை : 01

**காத்தான்குடி கட்டட அனுமதி தொடர்பான விபரம்**

| Year | UDA | | H&TI | |
|---|---|---|---|---|
| | submission | approved | submission | approved |
| 2014 | 75 | 53 | 165 | 44 |
| 2015 | 86 | 65 | 218 | 186 |
| 2016 | 94 | 31 | 270 | 242 |
| 2017 | 73 | 18 | 212 | 183 |
| 2018 | 79 | 13 | 206 | 168 |
| **Total** | **407** | **180** | **1071** | **823** |

மூலம்: திட்டமிடல் பிரிவு, காத்தான்குடி நகர சபை – 2018

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அவதானிக்கும் போது காத்தான்குடியில் ஒவ்வொரு வருடமும் அமைந்துள்ள வீடுகளிற்கு மேலாக புதிய கட்டடங்கள் அமைக்கப்படுவதானது நெருக்கமான சூழலை உருவாக்குகின்றது என கூறலாம்.

பெண்பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் தனியான வீடு கட்டி திருமணம் செய்து வைக்கும் நிலைமை காணப்படுகின்ற போது விரும்பியோ விரும்பாமலோ தற்போதைய நவீன கலாசார முறைமைக்கு ஏற்ற வகையினாலான வீடுகள் அமைக்க வேண்டிய தேவைப்பாடு நிலவுகிறது. இல்லையெனில் பிள்ளைகளிற்கு வரம் தேட குறித்த குடும்பம் தகுதியற்றது போன்று சமூகத்தால் சித்தரிக்கப்படுகின்றது. இது போன்ற செயற்பாடுகளினால் வசதியற்ற, நாளாந்த வாழ்வைக் கூட சிரமமின்றி கொண்டு செல்ல இயலாத மக்கள் உளவியல், பொருளாதார ரீதியாகவும் பல சவால்களை சமூகத்தில் எதிர்கொள்கின்றனர்.

**நெருக்கமான சூழல்**

பொதுவாக காத்தான்குடியில் எதுவித கட்டடங்களும் அமைப்பதற்கு ஏற்ற வகையினாலான இடவசதி இல்லாத போதிலும் அமைக்கப்படும் சூழலானது ஒவ்வொரு பகுதிகளிலும் பிரச்சினைகள் இலகுவாக எழ வாய்ப்பளிக்கின்றது எனலாம். தற்போது காத்தான்குடியில் உள்ள மொத்த கட்டடங்களின் எண்ணிக்கையானது 18805 ஆகும். ஒவ்வொரு வருடமும் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கின்றது. 2013ம் ஆண்டு 17396 மொத்த கட்டடங்கள் காத்தான்குடி நகர சபையின் கீழ் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளன. 2014ம் ஆண்டு 17397 கட்டடங்களும், 2015ம் ஆண்டு 18574 கட்டடங்களும், 2016ம் ஆண்டு 18574 கட்டடங்களும், 2017ம் ஆண்டு 18792 கட்டடங்களும் இறுதியாக 2018ம் ஆண்டு 18805 கட்டடங்களுமாக பதிவு செய்யப்பட்ட கட்டடங்களாக காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:

*அட்டவணை : 02*

காத்தான்குடி ஆதனங்களின் விபரம்

| வட்டாரம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| 01 | 1885 | 1885 | 2009 | 2009 | 2030 | 2030 |
| 02 | 1429 | 1429 | 1484 | 1484 | 1492 | 1492 |
| 03 | 1488 | 1488 | 1524 | 1524 | 1592 | 1592 |
| 04 | 938 | 938 | 1018 | 1018 | 1088 | 1088 |
| 05 | 951 | 951 | 950 | 950 | 951 | 951 |
| 06 | 2689 | 2689 | 2745 | 2745 | 2787 | 2787 |
| 07 | 967 | 967 | 969 | 969 | 999 | 999 |
| 08 | 785 | 785 | 1016 | 1016 | 851 | 851 |
| 09 | 2531 | 2531 | 2662 | 2662 | 2651 | 2651 |
| 10 | 1812 | 1813 | 2079 | 2079 | 2136 | 2136 |
| 11 | 1041 | 1041 | 1156 | 1156 | 1190 | 1190 |
| 12 | 880 | 880 | 962 | 962 | 1025 | 1038 |
| மொத்தம் | **17396** | **17397** | **18574** | **18574** | **18792** | **18805** |

*மூலம்: நானாவிதப் பிரிவு, காத்தான்குடி நகர சபை – 2018*

ஆகவே தான் காத்தான்குடியின் 12 வட்டாரங்களிலும் 2017ம் ஆண்டு வரை அமைந்துள்ள கட்டடங்களின் மொத்த தொகை எடுத்துக்காட்டப்பட்டதன் அடிப்படையில் இப்பிரதேச மக்கள் இடவசதி இல்லாவிடினும் தொடர்ந்தும் கட்டடங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றனர் என தெளிவாகின்றது. இதனால் ஏற்படும் விளைவுகளையும், மக்களின் நெருங்கிய வாழ்க்கையும் தொடர்ந்து பல சவால்களை அயலவர்கள், உறவினர்கள், இயற்கைச் சூழல், மார்க்க விடயம், கல்வி பொருளாதாரம், இடவசதி மற்றும் கழிவகற்றல் முறைகள் என்பவற்றிலும் எதிர் நோக்குகின்றனர். கட்டடங்களின் அதிகரிப்பினால் காத்தான்குடியில் மக்களின் செறிவு ஒரு குறிப்பிட்ட பரப்பினுள் அதிகரித்து காணப்படும் போது அங்கு பல்வேறு வகையான சவால்களை அனைவரும் எதிர் நோக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

**வர்த்தக, வியாபார மையங்களின் அதிகரிப்பு**

இருப்பிட ரீதியான சவால்களுக்கு மற்றுமொரு விடயமாக அமைவது வர்த்தகமும், வியாபார நடவடிக்கைளுமே ஆகும். ஏனெனின் பௌதீக ரீதியாக நோக்கும் போது காத்தான்குடி பிரதேசமானது பொருளாதார வளம் நிரம்பியதாகவும், இங்கு வாழும் அனைத்து மக்களும் வசதிவாய்ப்புகளுடன் வாழ்கின்றனர் என்றுமே பிற நிறுவனங்களும், அரசும் கருதுகின்றன. காத்தான்குடியைப் பொருத்தமட்டில் கடைகளுக்கான வாடகைப் பணம் ரூபா 10000, 20000 என்ற அடிப்படையிலேயே காணப்படுகின்றன. சிறிய நிலப்பகுதியில் கடையினை தங்களுடைய இருப்பிடத்துடன் இணைத்து கட்டும் கலாசாரம் உருவாகியுள்ளமையால் சமூகத்தில் தொடர்ந்தும் பிரச்சினைகள் எழ வாய்ப்பளிக்கின்றன.

*அட்டவணை : 03*

**வியாபார கட்டடங்கள் தொடர்பான விபரம்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|

| | |
|---|---|
| 2015 | 1619 |
| 2016 | 1683 |
| 2017 | 1726 |
| **மொத்தம்** | **5028** |

*மூலம்: நானாவிதப் பிரிவு, காத்தான்குடி நகர சபை – 2018*

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது காத்தான்குடியில் அமைக்கப்படும் வர்த்தக மையங்களின் 3 வருடங்களிற்கான எண்ணிக்கை எடுத்துக்காட்டப்படுகின்றன. 2015ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட மொத்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையானது 1619ஆக காணப்படும் அதே சமயம் 2016ம் ஆண்டு 1683 என்ற அடிப்படையில் அதிகரித்துள்ளமையினை அவதானிக்கலாம். தொடர்ந்து 2017ம் ஆண்டு 1726 பதிவு செய்யப்பட்ட வர்த்தக மையங்கள் நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இயற்கை காற்று, ஒளியினை அனுபவிக்காத அடைபட்ட வாழ்விற்குள் மக்கள் தள்ளப்படுகின்றனர். புதுப்புது வர்த்தக நிலையங்களின் உருவாக்கமானது சமூகத்தில் ஏதோ ஒரு வகையில் முரண்பாட்டினை தோற்றுவிக்கின்றது. ஒரே பகுதியில் ஒரே விதமான இரண்டு கடைகள் காணப்படுவது கூட இரு கடை உரிமையாளர்களுக்கும் இடையில் சச்சரவினை தோற்றுவிக்கின்றது.

**குடும்ப , அயலவர்களுடனான முரண்பாடு**

ஒருவர் மற்றவருடன் ஏதோ ஒருவகையில் நெருங்கி வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். ஒருவரின் தேவை மற்றையவரில் தங்கியுள்ளது. எந்த அளவிற்கு உறவுகள் மேற்கொள்ளப்படுகின்றதோ அதற்கு சம அளவில் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் குடும்பம் மற்றும் அயலவர்களிடத்தில் ஏற்படுகின்றன எனலாம். மேலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான நேர்காணலின் போது பின்வரும் விடயம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

“குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளை ஒருவர் அவருடைய விருப்பின்படி போசவோ, வேறு இடங்களிற்கு செல்லவோ முடியாது. மாறாக ஒரே சகோதரிகள் இருவரும் அருகருகே இருப்பதனால் அதிகளவு ஒற்றுமை ஏற்படுவதை தவிர சிறிய பெரிய அளவினாலான அனைத்து விடயங்களிற்கு பிரச்சினையும் முரண்பாடும் தோன்றுகின்றன. இருவர்கள் கூடி ஒருவரைப் பற்றி புறம் பேசுதல், பொதுவேலிகள் இல்லாமையினால் ஒரு வீட்டில் இடம்பெறும் விடயங்களினை உற்றுக் கேட்டல், பின்பு அதனை விமர்சித்தல் போன்ற பல்வேறு வகையான சமூக பிரச்சினைகள் எமது நிறுவனத்திற்கு விசாரனைக்காக வருகின்றன” என தெரிவித்தார்.

இவற்றை அவதானிக்கும் போது நெருக்கமான மக்கள் சூழலையும், வாழிட முறைமைகளையும் கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதால் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மேற்காட்டப்பட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.

**இடப்பற்றாக்குறை**

காத்தான்குடி பிரதேசம் எதிர் கொள்ளும் பாரிய பிரச்சினையாக இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது. 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 47125 மக்கள் வாழ்கின்றனர். 18 கிராம சேவக பிரிவுகளில் மக்கள் பரம்பல் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன. அதிகமாக பொருளாதார மாயையில் சிக்குண்ட காத்தான்குடி பிரதேச மக்கள் தங்களது வசதிவாய்ப்பினை வீடு, கடைகள் மூலமாக வெளிப்படுத்த நாடுகின்றனர். பெரிய நிலப்பரப்பினுள் பெரிதாக அடுக்கு மாடிகளை கட்டி ஒரு பிள்ளைக்கு கொடுத்து திருமணம் செய்து

வைக்கின்றனர். இது தவிர ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் ஒவ்வொரு தனியான வீடுகள் கட்டும் முறைமையும் காணப்படுகின்றது.

இவ்வாறான இடப்பற்றாக்குறையானது வாழிட நெருக்கடி, வடிகாண் முறைமை, கழிவகற்றல் முறைமை, பொது வேலி பிரச்சினைகள் என்பன ஏற்படவும் காரணியாக அமைகின்றன. பொருளாதாரத்தின் விளைவினாலேயே மக்கள் அதிகம் தங்கி காணப்படுகின்றனர். அதுபோல வெளிப்பிரதேச மக்களும் இங்கு வந்து குடியேறவும், தொழில்கள், கைத்தொழில்களை புரியும் நிலையினால் தொடர்ந்து நெருக்கடியான சூழல் உருவாகியும் காணப்படுகின்றது. காத்தான்குடியில் நிலையான குடியிருப்புக்கள் ஒருபுறம் காணப்பட மற்றைய புறம் இங்கு குடியேறி வாடகைக்கு வாழ்பவர்களும் எண்ணிலடங்காத தொகையினர் காணப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் காத்தான்குடியில் பல்வேறு வகைகளிலும் மக்கள் இடப்பற்றாக்குறையினை அனுபவிக்கின்றனர் என தெரிவிக்கலாம்.

**கல்வி தொடர்பாக எதிர்நோக்கும்**

காத்தான்குடி சமூகமானது ஆரம்பகாலங்களில் காணப்பட்டதை விட தற்போது கல்வி நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்களினை எதிர்நோக்கியுள்ளது. மக்கள் எந்தளவு அன்றாட உணவு, உடைக்கு முன்னுரிமை அளிப்பார்களோ அதற்கு சம அளவில் கல்விக்கான முன்னுரிமையை அளிக்கின்றனர். இந்நிலையில் கல்விக்காக இப்பிரதேச மக்கள் எதுவும் செய்வர் என்ற மனநிலையில் மாறிய பிற்பாடு கல்வியை தற்போது வியாபாரமாக மாற்றிய சூழ்நிலை காணப்படுகின்றது. மக்களின் பொதுவான கண்ணோட்டத்தின்படி, கல்வி நிறுவனங்களின் செயற்பாடும் உருவாக்கமும் நன்மையை விட பாதகமான பல விளைவுகளை உருவாக்குகின்றது என அறிய முடிந்தும் இன்று பாடசாலைகளை விட அதிகளவு நம்பிக்கையை மக்கள் பிரத்தியோக வகுப்புக்களில் கொண்டுள்ளனர் எனின் அதற்கு காரணமாக ஏனையவர்கள் அல்லது பிறர் என்பதே அமைந்துள்ளது. வீதிக்கு வீதி கடைகள் இருப்பது போன்று இன்று வீதிக்கு வீதி பிரத்தியோக வகுப்புக் கலாசாரம் கல்வி வகுப்புக்கள் உருவாகியுள்ளன. மிகக் குறைவான ருபா 500 மேலே மாதாந்த கட்டணம் பெறப்படுகின்றன. வாரம் 2 தினங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதும் ஏனைய நாட்களில் வேறு வேறு வகுப்புக்களுக்கு பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

இச்சமூகத்தின் அனைத்து செயற்பாடும் ஒருவர் செய்தால் நாமும் செய்ய வேண்டும் என்ற நிலையில் ஆழமாக பதியப்பட்டது. ஆக மக்கள் தொகையும் அடர்த்தியும் அதிகமாக காணப்படும் போது எவ்வாறு ஒரு பொருளினை விற்பனை செய்தால் வியாபாரம் இடம்பெறுமோ அது போன்று எங்கு கல்வி நிலையங்களை உருவாக்கினாலும் மாணவர்களும், பெற்றோர்களும் கல்விக்காக எச்சிரமங்களை அடைந்தாலும் வருவார்கள் என்ற நம்பிக்கையில் கல்வி வியாபாரம், அல்லது வர்த்தக தளமாக மாற்றப்பட்டு இன்றைய மக்களை பொருளாதார ரீதியாக நெருக்கும் ஊடகமாகவும் மாணவர்களின் மன உளைச்சளை உருவாக்கும் அமைவிடமாகவும் மாறியுள்ளது எனலாம்.

**சுற்றாடல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்**

மக்கள் தாம் வாழும் சூழலை அவர்களது வசதிக்கு ஏற்பவும், மன அமைதிக்கு ஏற்பவும் அமைத்துக் கொள்வது சுற்றாடலிலேயே தங்கியுள்ளது. சுற்றுச்சூழலை தூய்மையாகவும், மாசுபடாமல் காப்பது தொடர்பாக அரசு மற்றும் தனியார் அமைப்புக்கள் பல்வேறு நடைமுறைத் திட்டங்களை மேற்கொள்கின்றன. இருப்பினும் காத்தான்குடியில் தொடர்ந்து சுற்றாடல் ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டே வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை கட்டுப்படுத்தி மக்களுக்கு ஏதுவான சுற்றுச்சூழலினை உருவாக்க காத்தான்குடியில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் மக்கள் மிக அடர்த்தியாக வாழ்வதனால் இலகுவாக சூழல் மாசடையக்

கூடியதாகவும் தொற்றுகள் விரைவாக பரவக்கூடியதாகவும் காணப்படுகின்றன. எந்த ஒரு சூழலும் இயல்பாக மாசடையாது. ஆனால் சூழலின் அடர்த்தியும் மக்களின் பொருட்பாவனையும் அதிகரிக்கும் போது அவற்றினை முறையாக கையாள்வதில் சிரமம் ஏற்படுகின்றன. இதன்போது சுற்றாடல் பல விளைவுகளை எதிர்கொள்கின்றன.

**கழிவகற்றல் ரீதியினாலான சவால்கள்**

முறையான கழிவகற்றல் இன்மையானது மக்கள் எதிர் கொள்ளும் பாரிய சவாலாக காணப்படுகின்றது. எவ்வாறெனில் தற்போது வீடுகள் மிக நெருக்கமாக உள்ளமையினால் கழிவுக்காண்களை அமைக்கும் போது தங்களது வீட்டிற்கு ஓரத்திலும், பக்கத்து வீட்டிற்கு அருகிலுமே அமைக்கின்றனர். இதனால் அயலவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டு முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றன. இதற்கு மாற்றீடாக வீடுகட்டும் போது வீட்டின் மண்டபம் மற்றும் ஏதேனும் ஒரு அறையினுள் கழிவறைகளை உருவாக்கிய பின்பு அதனை மறைத்து மேலால் தரை இடுகின்றனர். மழை காலங்களில் நீர் வடிந்தோட இடமில்லாத போது கழிவுக்குழாய்கள் நிரம்பினால் பாரிய துர்நாற்றம் ஏற்படுகின்றன. இதனால் கழிவறையை துப்புறவு செய்ய மீண்டும் வீட்டின் பகுதியை உடைக்க வேண்டிய கட்டாயத்தினுள் மக்கள் தள்ளப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தில் முறையான வடிகாணமைப்பு காணப்படாமை மற்றொரு சவாலாக அமைந்துள்ளது. அதிகமான மக்கள் வாழும் சூழலில் நீர்ப்பாவனைகளும், கழிவுகளும் அதிகமாகவே வெளியாகும். இவ்வடிகாண்களை முறையாக கடைப்பிடிக்காவிடின் மக்கள் அடர்த்தி கூடிய பிரதேசத்தினை கையாள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

தேங்கி நிற்கும் நீரினால் நுளம்புகளும், துர்நாற்றங்களும் வெளியாகுவதால் இலகுவாக தொற்று நோய்களும் பரவும் அபாயம் காணப்படுகின்றன. இதுபோன்ற விளைவுகள் சமூகத்தில் தொடர்ந்து ஏற்படுகின்றதாயின் மக்கள் செறிவு பிரதான காரணமாகும் என ஆய்வின் பெறுபேறுகளில் கண்டறியப்பட்டுள்ளன. ஆறு, கடல் ஆகிய இரு முக்கிய வளங்களும் கழிவுகள், குப்பைகளின் ஊடாக நிரப்பப்பட்டு இயற்கை நீர்வளம் மாசுபடுத்தப்பட்டுகின்றது. காத்தான்குடியின் ஆற்றங்கரை பகுதிகளை அவதானிக்கும் போது தற்போதைய நிலைமையை விட முன்னர் மிகவும் துர்நாற்றம் மற்றும் கழிவுகள் படிந்த நிலையிலேயே காணப்பட்டது. அதுமட்டுமன்றி அவ்வீதிகளால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சற்று இந்நிலைமை மாற்றம் அடைந்தாலும் குறித்த பகுதியானது மிகவும் தூய்மையான நிலையில் அமையவில்லை என்று குறிப்பிடலாம். இதன்போதான நிலைமையில் காத்தான்குடியில் தூய வளியினை சுவாசிப்பது என்பது கேள்விக்குரிய அம்சமாகும்.

மக்கள் தொகை அதிகமாக காணப்படுவதனால் அவர்களது பொருட்பாவனைகள், பொலித்தீன் பாவனைகள் மற்றும் அதனூடாக வெளிவரக்கூடிய கழிவுகளும் அதிகமாகவே காணப்படும். இவற்றை முறையாக அகற்றுவதற்கு தேவையான இடவசதிகளோ, ஏனைய முறைமைகளோ இல்லாமையினால் காத்தான்குடியினை பொறுத்தமட்டில் கழிவுகள் ஒரு சில பகுதிகளில் வீதிகளில் இடப்படுகின்றன, வீட்டிற்கு அருகில், அல்லது குடியிருப்புக்கள் இல்லாத காணியில் இடப்படுகின்றன. கழிவுகளை அகற்றி முறையான ஓர் இடத்தில் வைத்து மீள் சுழற்சி மேற்கொள்ள பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அதற்கான இடவசதியோ நிலமோ இல்லை. இது தொடர்பான நேர்காணலின் போது,

> ‘‘வாரத்திற்கு ஒருமுறை குப்பைகளை அகற்ற இயந்திரம் வருகின்றது. குறித்த ஒரு வீதியில் பகுதியளவு வீடுகளில் நிரம்பியுள்ள குப்பைகளை அகற்றும் போதே கழிவகற்றும் இய்நதிரம் நிரம்பிவிடுகின்றது. மீண்டும் ஒரு சில நிமிடங்களில் வருகை தருவோம் என கூறிச் செல்கின்றனர். ஆனால் வரமாட்டார்கள். இதன் போது எங்களது வீட்டுக் கழிவுகள் சேர்ந்து புளுக்களும் ஏற்படுகின்றன’’ என தெரிவித்தனர்.

இவ்வாறான கருத்துக்களை அவதானிக்கும் போது, சூழல் மாசடைவது மாத்திரமல்லாமல் நோய்களும், காவிகளினூடான தொற்றுகளும் இலகுவாக பரவுகின்றன. காத்தான்குடியினை பொறுத்தவரை 300 மேற்பட்ட வீதிகளும் 14000 மேற்பட்ட குடும்பங்களிலும் மக்கள் வாழ்கின்றனர்.

அட்டவணை : 04

**கழிவகற்றல் வாகனங்கள் தொடர்பான விபரம்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 42 |
| 2016 | 42 |
| 2017 | 42 |
| 2018 | 44 |

*மூலம்: வாகனப்பிரிவு, காத்தான்குடி நகர சபை – 2019*

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அவதானிக்கும் போது காத்தான்குடி நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் வீடு மற்றும் வீதிக் கழிவுகளினை அகற்றுவதற்கு என்று மொத்தமாக தற்போது 44 வாகனமே காணப்படுகின்றன. ஆனால் காத்தான்குடியினை பொறுத்தவரை மொத்தமாக 300 மேற்பட்ட வீதியமைப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும் இவ்வாகனங்களின் எண்ணிக்கையானது 2015ம் ஆண்டு தொடக்கம் 2017 வரையான 3 வருட காலப்பகுதியினுல் மொத்தமாக 42 வாகனங்களே காணப்பட்டன. பின்பு 2018ம் ஆண்டு காத்தான்குடி நகர சபையானது அதற்கு சொந்தமான பணத்தில் 2 வாகனங்கள் வாங்கியமையினால் 44 கழிவகற்றும் வாகனங்கள் காணப்படுகின்றன என தெரிவிக்கலாம்.

பொதுவாக காத்தான்குடி பிரதேசத்தினையும் மக்களின் அடர்த்தியினையும் அவதானிக்கும் போது கழிவகற்றல் இயந்திரமும் அதனது பாவனையும் பெரிதும் வேண்டப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றன. ஆயினும் இப்பிரதேச கழிவுகளை உரிய நேரத்தில் அனைத்து பகுதிகளிற்கு சென்று எடுத்து அகற்றக் கூடியளவு வசதியும் காணப்படுவதில்லை. ஆக வாரத்திற்கு ஒரு முறைதான் ஒவ்வொரு பகுதிகளிற்கும் கழிவினை பெற்று வருவதற்கான இயந்திரம் செல்கின்றது. இந்நிலைமையில் கழிவகற்றல் செயன்முறை பெரிதும் கேள்வியை ஏற்படுத்துகின்றது எனலாம்.

மேலும் கழிவுகளை பதப்படுத்தி மீள்சுழற்ச்சி உற்பத்திக்காக பயன்பட செய்யும் அளவு இடவசதியும், இயந்திர தொழில்நுட்பமும் இல்லாமையானது மற்றொரு சவாலாக அமைந்துள்ளது. இது தொடர்பான நேர்காணலின் போது,

> ''காத்தான்குடியினை பொறுத்தவரையில் நகரசபைக்கு வழங்கப்படுகின்ற ஒட்டுமொத்த தனியார் மற்றும் அரச நிறுவன நிதிகளில் அதிகூடிய அளவு பணமானது கழிவகற்றல் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்களிற்கே செலவிடப்படுகின்றன. காத்தான்குடியில் கழிவகற்றல் முறைகளினாலேயே அதிகளவு நோய் மற்றும் ஏனைய சமூகப்பிரச்சினைகளும் சவால்களும் உருவாக காரணமாகின்றன. கழிவு முறையை சரியாக பேணுவதன் மூலமும், கழிவு நீர் வடிந்தோடுவதற்கு தேவையான முறைகளை ஏற்படுத்தினாலும் காத்தான்குடி தூய்மையை உணரும். சுகாதார மற்றும் சுற்றாடல் ரீதியான சவால்களில் இருந்து பாதுகாப்பும் கிடைக்கும்'' என தெரிவித்தார்.

ஆகவேதான் இவ்வாறான கருத்துக்கள் மற்றும் விளைவுகளினை முழுமையாக அவதானிக்கும் போது காத்தான்குடியின் சவால்களில் மிகப்பாரிய சவாலாக கழிவுமுறை அமைந்துள்ளதை ஆய்வின் பகுப்பாய்வில் இருந்து அவதானிக்க முடியுமாக உள்ளது. அடர்த்தி கூடிய பகுதியாக காத்தான்குடி காணப்படுவதனால் விரைவாக ஒருவரில் இருந்து ஒருவருக்கு நோய் கடத்தப்படவும், கிருமிகளின் தாக்கத்தினால் வளி, நீர் மாசடையவும் ஏதுவாக அமைகின்றன. எனவேதான் கழிவகற்றல் முறைமையானது மக்கள் அடர்த்தி அதிகரிப்பதனால் பாதிப்புக்குள்ளாகி சமூக சவாலாக பரிணமித்துள்ளது எனலாம்.

**வாகனங்களின் அதிகரிப்பு மற்றும் விபத்துக்களும்**

மக்களின் அடர்த்தியினால் காத்தான்குடியின் பௌளதீக சூழல் எதிர் கொள்ளும் பாரிய சவாலாக அமைவது அதிகரித்துக் கொண்டு வரும் வாகனங்களும் அதனால் ஏற்படும் விபத்துக்களையும் குறிப்பிடலாம். சாதாரணமாக காத்தான்குடியின் வீதியின் அமைப்பும் வாகனங்களின் அதிகமான பாவனையுமே இவ்வாறான விளைவு சமூகத்தில் ஏற்பட மிகப்பிரதானமான காரணமாகும் என்பதை அறியமுடியுமாக உள்ளது. ஆரம்ப காலகட்டங்களில் வாகனம் என்பது மிகக் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் தற்போது ஒவ்வொரு வீட்டில் எத்தனை ஆண்கள் இருக்கிறார்களோ அதற்கு சம எண்ணிக்கையில் வாகனங்கள் காணப்படுகின்றன.

அட்டவணை : 05

**பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் விபரம்**

| Vehicle category | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| Motor Cycle | 6499 | 7787 | 8242 |
| Three wheeler | 949 | 1048 | 1210 |
| Motor Car | 269 | 303 | 357 |
| Dual purpose | 467 | 530 | 562 |
| Motor Lorry | 217 | 225 | 237 |
| Lorry trailer | 1 | 2 | 3 |
| Land vehicle | 65 | 71 | 71 |
| Omni bus | 7 | 5 | 5 |
| Private coaches | 18 | 26 | 26 |
| Other | 1 | 27 | 27 |
| **Total** | **8493** | **10024** | **10740** |

*மூலம் : வாகனப் பிரிவு, காத்தான்குடி பிரதேச செயலகம் - 2018*

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அவதானிக்கும் போது 2015ம் ஆண்டு 8493 ஆக காணப்பட்ட வாகனமானது 2016ம் ஆண்டு மொத்தமாக 10024 என்ற அளவு வளர்ச்சியடைந்துள்ளது. 2017ம் ஆண்டு 10740 என்ற எண்ணிக்கையில் வாகனப் பாவனை அதிகரித்துள்ளது. பொதுவாக காத்தான்குடியில் வாழ்கின்ற மொத்த சனத்தொகையின் எண்ணிக்கை அண்ணலவாக 48000 மக்களையே கொண்டுள்ள போது குறித்த பிரதேசத்தில் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையானது அதைவிட ஒரு மடங்கு அதிகமாகவே காணப்படுகின்றது எனலாம். இது தவிர வாகனங்கள் சொந்தமாக இல்லாதவர்கள் வாடகைக்கு பணம் செலுத்தி 2 அல்லது 3 நாட்கள் தவணைக்கு பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான வாகனப்பாவனை அதிகரித்துக் கொண்டு செல்லும் போது சூழல் புகைகளால் நிரப்பப்படுகின்றது. இதனாலேயே வளி மாசடைவும் ஏற்படுகின்றது என தெளிவாக முன்வைக்கலாம். காத்தான்குடி பிரதேசத்தினை பொறுத்தவரையில் ஒரு மனிதன் அவனுடைய வீட்டில் சுவாசிப்பதற்கு கூட தூய்மையான வளி கிடைப்பதில்லை. இதனாலேயே சிறு பிள்ளைகளிற்கும் ஆஸ்துமா இலகுவாக ஏற்படுகின்றது என காத்தன்குடி தள வைத்தியசாலையின் பிரதான வைத்தியர் ஜாபிர், தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி ஏனைய நாட்களை விட பெருநாள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் காத்தான்குடியில் வாகன நெரிசல் அதிகமாக காணப்படுகின்றன.

தற்போது வீதியில் நடமாடுவதும், சிறுவர்கள் வீதிகளில் செல்வதும் கேள்வியை எழுப்பியுள்ளது. வாகன நெரிசலின் தாக்கமானது தொடர்ந்து விபத்துக்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றன எனலாம். பொதுவான காத்தான்குடி மக்களில் அதிகமானோர் வீதி விதிகளை கடைப்பிடிப்பது அரிது. சிறிய குறுக்கு வீதிகளில் வாகனத்தினை மிக வேகமாக செலுத்துவதனால் எண்ணிலடங்கா விபத்து ஏற்பட ஏதுவான காரணியாகவும் உள்ளது. மோட்டார் வாகன பொலிஸ் அதிகாரிகள் முறையற்ற சாரதிகள் மற்றும் சிறுவர்கள் வாகனம் செலுத்தும் போது அவர்களையும தடுத்து நிறுத்துகின்றனர். ஆனால் அவர்கள் வாகனத்தினை

நிறுத்தாமல் மிக வேகமாக வாகனத்தை செலுத்தி விபத்துக்களையும் காணங்களையும் ஏற்படுத்துகின்றனர். பெற்றோர்களின் கவனயீனமும் இதற்கு காரணமாகவும் அமைகின்றது.

காத்தான்குடி, வாகனப் பிரிவு-2018 அறிக்கையின்படி, தார் வீதி : 28.55 km, கிறவல் வீதி : 35.809 km , கொங்கிரீட் வீதி : 24.871 km, பொருத்துக்கல் வீதி : 25.54km, வடிகாண் : 16.67 km, காபட் : 1.75 km காணப்படுகின்றது. இவ்வீதிகளினுடைய விபரங்களை பார்க்கும் போது காத்தான்குடி 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பினுள் கட்டங்களின் பரம்பலைத் தொடர்ந்து வீதிகளால் நிரப்பப்பட்ட தன்மையினையே அறியலாம். மிகச்சிறிய வீதிகளும் ஒன்றுடன் ஒன்று ஊடருத்துச் செல்லும் வகையிலும் குறுக்கு வீதிகளும் அமைந்துள்ளமையும், அதிகமான வீதியின் தன்மை கொங்கிரீட்களால் அமைக்கப்பட்டுள்ளமையினால் இலகுவாக சேதத்தினை ஏற்படுத்துகின்றன.

*அட்டவணை : 06*

**வீதிவிபத்து தொடர்பான விபரம்**

| வகைகள் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| இறப்பு | 9 | 12 | 13 | 7 | 11 |
| பெரிய காயம் | 16 | 38 | 19 | 28 | 26 |
| சிறிய காயம் | 51 | 11 | 44 | 57 | 48 |
| சேதம் | 12 | 3 | 11 | 8 | 6 |
| மொத்தம் | 88 | 104 | 89 | 100 | 91 |

*மூலம்: மோட்டார் வாகனப்பிரிவு, காத்தான்குடி பொலிஸ் நிலையம்- 2018*

மேற்காட்டப்பட்ட வீதி விபத்துக்கள் தொடர்பான விபரங்களை அவதானிக்கும் போது காத்தான்குடியில் எவ்வாறான விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியுமாக உள்ளது. காத்தான்குடியினை பொறுத்தவரை வீதி விபத்துக்களை குறைக்க விஷேடமாக பல்வேறு நடவடிக்கைகள், உத்திகள் கையாளப்படுகின்ற போதிலும் விபத்துக்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகின்றன. தற்போது விபத்துக்கள் ஏற்படுவது சாதாரண விடயமாக மாற்றமடைந்து உயிர், உடல், பொருளாதார சேதங்கள் உருவாகுவது சமூகத்திற்கு பாரிய சவாலாக மாறியுள்ளது. இயற்கையான மரணம் வரும் முன் விபத்துக்களால் மரணம் சம்பவிக்கும் என்று இப்பிரதேச மக்கள் நாளாந்தம் சந்தேகத்துடனான வாழ்வில் பயணிக்கின்றனர்.


விபத்துக்களும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள், ஆபத்துக்களும் இப்பிரதேசத்தில் மக்கள் அடர்த்தி ஏற்படுவதனாலும் மற்றும் வாகனங்களின் அதிகரிப்பினாலுமே தவிர வேறு எதுவித பிரதான காரணங்களினாலும் ஏற்படுகின்றது என்று எடுத்துக்காட்ட முடியாது. ஆக மக்கள் அடர்த்தியினால் வீதி விபத்து மற்றும் வாகனப்பாவனையும் அதிகரித்துக் கொண்டு வருகின்றமை சமூகம் எதிர் கொள்ளும் சவால்களுள் ஒன்றாகும் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**சமய தொடர்பான சவால்கள்**

ஒரு சமூகம் உருவாக பெரிதும் பங்களிப்பு செலுத்தும் காரணியாக கலாசார, சமய விடயங்களே காணப்படுகிறன. ஒத்த பண்பு, கலாசார விழுமியங்களை பின்பற்றும் ஒரு குழுவே சமூகமாக இணைந்து வாழும் போது அங்கு பொதுமைப்படுத்தப்பட்ட நம்பிக்கை, மரபும் காணப்படுகின்றன. மக்கள் தொகை வளர்ச்சியை நோக்கி செல்லும் போதும் அடர்த்தி ஏற்படுகின்றன. அவ்விடத்தில் முரண்பாடுகளும், மாற்றங்களும் இயல்பாக உருவாகின்றன. காத்தான்குடி சமூகத்தை பொறுத்தமட்டில் மக்கள் அடர்த்தி அதிகரித்துச் செல்லும் போது கலாசார பண்பாடு ரீதியாக பல சவால்களும் ஏற்படுகின்றன. அவையாவன:

வரைபு : 01

**சனத்தொகை அடர்த்தியினால் கலாசார, பண்பாடுகள் ரீதியாக சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்**




*n=90, மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு - 2018*

மேற்காட்டப்பட்ட வரைபின் அடிப்படையில் பார்க்கும் போது சமயம், ஆடை முறைமை, திருமணம் மற்றும் மரண சடங்கு முறைகள், நவீன காலாசார ஊடுறுவல்கள் போன்ற பல்வேறு வகைகளிலும் காத்தான்குடி பிரதேச மக்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர் என எடுத்துக்காட்ட முடியும். அதாவது காத்தான்குடியின் ஆரம்ப வரலாற்று காலத்தில் இருந்து ஜம்இய்யதுல் உலமா எனும் ஒரு சபையின் தலைமையின் கீழ் மக்கள் இயங்கி வந்தனர். ஜாமிஅதுல் பலாஹ் எனும் அரபுக்கலாசாலையும் காணப்பட்டது. பின்பு 1980 களின் பிற்பாடு குடியேற்றம், இடம்பெயர்வு, வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்காக செல்லல், போன்ற பல்வேறு காரணங்களை புதிய கொள்கைகள், கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளை உருவாக்கியது. இதன்போது கொள்கைகள் பல உருவாகின. குறித்த கொள்கைகள் பல முரண்பாடுகளையும் தோற்றுவித்தன.

பயில்வானிஸம், அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ கொள்கை, ஜாமிஉத் தௌஹீத், ஜமாத் இஸ்லாம், இலங்கை தப்லீக் ஜமாத், தாருல் அதர், இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம் , இலங்கை தௌஹீத் ஜமாத் போன்ற இன்னும் பல்வேறு மார்க்க உப குழுக்களும் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான குழுக்களிடையே அடிக்கடி முரண்பாடுகளும், கருத்து மோதல்களும் ஏற்படுகின்றன. இது தொடர்பான குழுக்கலந்துரையாடலின் போது,

"2007ம் ஆண்டு பயில்வானுடைய குழுக்களுக்கும் ஏனைய மக்களிடையே இடம்பெற்ற பிரச்சினையில் பயில்வானுடைய இறந்த உடலினை அவருடைய பள்ளிவாயலினுடைய பள்ளியினுள் அடக்கம் செய்ய விடாமல் 5 நாட்கள் தொடர்ந்து கலவரம் இடம்பெற்றன. பள்ளிவானுடைய 60 அடி கோபுரம் தரைமட்டமாக உடைக்கப்பட்டது. இதன்போது பொதுமகனில் ஒருவர் உயிரிழந்தார். பாரிய சமூக சேதம், பொருளாதார முடக்கம், உயிர் அச்சத்தினையும் ஏற்படுத்தியது" என தெரிவித்தனர்.

குறித்த பிரச்சினைகளைத் தொடர்ந்து அஹ்லுஸ் சுன்னா வல்ஜமாஆ மற்றும் தாருல் அதர் அத் அவிய்யா ஆகிய இரு குழுக்களிற்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு அது கலவரமாக மாறியதால் 16 தௌஹீத் கொள்கை உறுப்பினர்கள் 6 மாத காலமாக தற்காலிக சிறை தண்டணையை அனுபவித்த பின்பு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இது தவிர தற்காலம் வரை சமூக வலைத்தளம், ஊடகம், துண்டுப் பிரசுரம், மாநாடு, மார்க்க சொற்பொழிவுகள் என்பன மூலமாக சவால்களை ஏற்படுத்தி தங்களது எதிர்ப்பு வேறுபாடுகளை தெரிவித்து கொண்டிருக்கின்றனர்.

**முடிவுரையும் பரிந்துரையும்**

இவ்வாய்வினது காத்தான்குடி பிரதேசத்தில் சனத்தொகை அடர்த்தி ஏற்படுவதற்கான காரணங்களில் மிகப் பிரதானமான காரணமாக நில வசதி அல்லது இடவசதி இன்மையே ஆகும் என கண்டறியப்பட்டுள்ளது. ஏனெனின் மொத்தமாக உள்ள நிலப்பரப்பில் எத்தனை வீதமான மக்கள் வாழக்கூடிய வாய்ப்புகள் காணப்படும் என்பதைக் கொண்டு சனத்தொகை அடர்த்தி கணிப்பிடப்படுகின்றது. இலங்கையில் 2017ம் ஆண்டு சனத்தொகை

மற்றும் சனத்தொகை அடர்த்தி கணக்கெடுப்பின்படி, 323 காணப்படும் அதே சமயம் காத்தான்குடியில் 2017ம் ஆண்டின் அடர்த்தி வீதமானது 1sq. $km^2$ 7527 காணப்படுகின்றது.

காத்தான்குடியில் மொத்தமாக 6.505sq. $km^2$ பரப்பளவில் 6.502 x 323 = 2100 என்ற மக்கள் தொகையே வாழ வேண்டும். ஆனால் காத்தான்குடியில் 1sq. $km^2$ பரப்பளவில் அதிகளவு மக்கள் செறிந்து வாழ்கின்றனர். பொதுவாக அடர்த்தி என்பதும் அடர்த்தி இன்மை என்பதும் குறித்த பிரதேசத்தில் காணப்படும் மக்களின் எண்ணிக்கை மற்றும் நில பரப்பின் அளவிலேயே தங்கியுள்ளது என கூறலாம்.

மக்கள் அடர்த்தியினால் ஏற்படும் சவால்களில் மிகப்பிரதானமானது இடப்பற்றாக்குறையாகும். இடம் போதிய அளவு காணப்படுமாயின் அடர்த்தி என்ற சமூகப்பிரச்சினைக்கு எதுவித சவால்களும் ஏற்படமாட்டாது. குறித்த பிரதேசத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்தாலும் அவர்கள் அனைத்து சலுகைகளையும் நன்மைகளையும் இலகுவாக அனுபவிக்கின்றனர். அதுமட்டுமன்றி எந்தவொரு பணியாக இருந்தாலும் வேலையாக காணப்பட்டாலும் இலகுவாக செய்து முடிக்க கூடிய அளவு குறித்த ஆய்வுப் பிரதேசம் அமைந்துள்ளமையினால் மக்கள் சமூக மாற்றத்தினையும், இடம்பெயர்வினையும் விரும்பமாட்டார்கள். ஆக குறித்த பிரச்சினைக்கான சரியான தீர்வினை முன்னெடுக்க வேண்டுமாயின் அனைத்து வசதிகளும் பொருந்திய பகுதிகளுக்கு சமூக அசைவினை மேற்கொள்ள அல்லது அவ்வாறான பிரதியீட்டு தொடர்வீடமைப்பு முறைகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒன்றிணைந்து கொண்டு வந்து மக்களுக்கும் இது தொடர்பான முறையான அறிவூட்டல்களை பேணுவதன் மூலமும் சிறந்ததொரு தீர்வினை பெற்றுக்கொள்ளலாம்.

**உசாத்துணைகள்**

Faleel Haque, K.M.M. (2004). *Population Growth and Urbanization an Empirical Study of Economic and Environmental Issues*. STP. Pathmaseelam.

Cohen Robin & Kennedy Paul. (2000). *Population Over Population Global Sociology.* Macmillan Press Ltd.

(2015-2017) Annual Report. Administrative division. Medical Health Office. Kattankudy.

(2013-2018). Annual Report. Management Assistant Division. Kattankudy Base Hospital. Kattankudy.

(2014-2017). Resource Profile. Planning Division. Kattankudy Divisional Secretariat.

(2006). U.S. census International data base. Retrieved from http;//timssandpirls.bc.ed>pirls2006/user-guide.html.

(2006). world population datasheet. Retrieved from http;//assets.prb.org>pdf06>06worlddatasheet.pdf.

Med India–calculator world population clock. Retrieved from http;//geography.about.com/ode/lists/2050 pop.html.

(2014). U.N.report. Retrieved from http;//unstats.un.org/unsd/demographic- social/census programme. Html.

(2012,2014&2015 ) . Census report. Department of census and statistics Sri Lanka. Retrieved from http;//city population infor/php./Srilanka-admin.php?adm21d- 5124.

(2011 & 2015). Planning division. D.S. office Kattankudy. Retrieved from http;//www.kattankudy.ds.gove.lk/index.php?option=comcontent&view=article& id4&itemid=63&lang=en.

(1500 – 2000). World Population Growth. Retrieved from http;//www.tribunindia.com/2005/special/tribune-125/population–JPG.

U.N. population Division. World Urbanization Prospects: The 2001 revision. 2002. Newyork, U.N.p.182. Retrieved from: http://info.k4health.org/pr/m16/m16chapt1- 1.shtml,accessed on 13.04.2015.

(2017). Department of Census and Statistics. Retrieved from www.statistics.gov.lk>education>school census Report-2017-pdf.

சிவகுமாரன், வீ.ச. (2001). *உயிர்ப்பல்வகைமை.* புதிப்புநிலை வேதா சிவகுமார்.

அர்ஸாத், எம்.எம் ரூ கமருன்நிஸா, ஏ.எம். (2002). *சமகாலப் புவியியல் ஒரு சமயோசித அணுகுமுறை.* புவியியல் சங்கம், தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

காதிர் மன்சூர், ஏ. (1997). *குடியிருப்புக்களின் பரம்பல்.* கலாசார சமய அலுவல்கள் அமைச்சு- கொழும்பு.

(1998). *"நாடுகளின் சனத்தொகை*". உயர்தர மானிடப் புவியியல் பகுதி -1 . கல்வி வெளியீட்டுத திணைக்களம்.

(2011). *"உலக சனத்தொகையில் பிரதான இயல்பு*" .கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

(1991). *உலக சனத்தொகையின் பிரதான இயல்பு.* கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழுப்பு.

வருடாந்த அறிக்கை . (2014 – 2017). வாகன பதிவுப்பிரிவு. பிரதேச செயலகம், காத்தான்குடி.

வருடாந்த அறிக்கை . (1980 – 2017). திட்டமிடல் பிரிவு. பிரதேச செயலகம், காத்தான்குடி.

ஆண்டறிக்கை . (2014 – 2018). நானாவிதப் பிரிவு . நகர சபை, காத்தான்குடி.

ஆண்டறிக்கை . (2014 – 2018). கட்டட திட்டமிடல் பிரிவு. நகர சபை, காத்தன்குடி.

**நேர்காணல்**

Farook Sibly[1] . Engineer & Former Member of Provincial Council Eastern Province.

Maheer,[2] S.D.M. (BVsc.) MSc in Epidemiology, Director of - RISE & Founder of Society for Research and Development.

Ibraheem[3], M. Collamist of News Paper. Kattankudy.

Jabir[4], M.S.M. Medical Superintendent & M.B.B.S. (SL). Kattankudy Base Hospital.

Nawas Mohamed[5]. Working Director of SLRC, Country Director of Sri Lanka and Maldives, Search for Common Ground Chairman of the Board of directors- RISE.

Ratnayaka [6], R.M.S. Motor Traffic officer. Kattankudy Police Division.

Asfar[7], M.S.H. Chairman of Kattankudy Urban Council.

Ramees[8], M.H.M. (B.A). Secretary of Federation of Kattankudy Mosques and Muslim Institutute. Kattankudy.

Rahmathullah[9], M.M. (P.H.I). Medical Health Office. Kattankudy.

Lebbe Umar[10], A.L. Quazi & Grama Nilathari. Kattankudy.